Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 104

சனிக்கிழமை
09 மார்ச் 2024

மாசி 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


**முச்சந்தி முரளி**



"சிவன் சாபம் குல நாசம் எண்டது உந்தக் கோதாரியில போவாருக்கு தெரியேலை போல"

# வெடுக்குநாறிமலையில் பொலிஸார் அக்கிரமம்!

## சிவராத்திரி வழிபாடுகளுக்குக் கெடுபிடி

## அச்சமூட்டும் காட்டுப்பாதையூடாக இரவிரவாக விரட்டப்பட்ட மக்கள்

## பலப்பிரயோகத்தால் எட்டுப்பேர் கைது

## குடிதண்ணீர்கூட எடுப்பதற்கு மறுப்பு

## கலகமடக்கும் பொலிஸார் களத்தில்





**வவுனியா, மார்ச் 9**

**வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நேற்றையதினம் முன்னெடுக்கப்பட்ட சிவராத்திரி வழிபாடுகள் பொலிஸாரின் அக்கிரமத்தால் தடுத்து நிறுத்தப்பட்டன. இரவிரவாக ஆலயச்சூழலில் வழிபட்டுவந்த எட்டுப் பேர் பொலிஸாரால் பலப்பிரயோகத்தைப் பயன்படுத்திக் கைதுசெய்யப் பட்டனர். அவர்களில் ஒருவர் அணிந்திருந்த வேட்டி அவிழ்ந்த நிலையில் அதைச் சரி செய்யக்கூடப் பொலிஸார் அனுமதிக்காமல் இழுத்துச் சென்றனர். இரவு 8 மணிக்குப் பின்னர் அச்சம் நிறைந்த காட்டுப்பாதையூடாக மக்கள் ஆதிலிங் கேஸ்வரர் ஆலயத்தில் இருந்து விரட்டப்பட்டனர். இதனால் வெடுக்குநாறிமலைப் பகுதி நேற்று பதற்றம் நிறைந்த பூமியாகக் காட்சியளித்தது.**

11

## காணி மோசடி; ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 9
யாழ்ப்பாணம், நல்லூர்ப் பகுதியில் உள்ள காணியொன்றை மோசடியாக உரிமை மாற்றம் செய்த குற்றச்சாட்டில் பெண்ணொருவர் யாழ். மாவட்ட விசேட

11

## ஐ.எம்.எப். கலந்துரையாடல்: எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு

கொழும்பு, மார்ச் 9
சர்வதேச நாணயநிதியத்தின் முன்மொழிவுகள் தொடர்பில் எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கு, ஐ.எம்.எப். பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

11

## வெளிநாடு அனுப்புவதாக 60 லட்சம் ரூபா மோசடி!

### யுவதியொருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 9
வெளிநாட்டுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து 60 இலட்சம் ரூபா மோசடியில் ஈடுபட்ட 27 வயதேயான யுவதி ஒருவர், யாழ்ப்பாணம் விசேட குற்றவிசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

11

## கனடா அனுப்புவதாக ரூ. 56 லட்சம் மோசடி

யாழ்ப்பாணம், மார்ச் 9
கனடா அனுப்புவதாகத் தெரிவித்து லட்சக்கணக்கான பண மோசடியில் ஈடுபட்ட பதுளையைச் சேர்ந்த நபர் யாழ். மாவட்ட விசேட குற்றவிசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

11

திருக்கேதீஸ்வரத்தில்

## சிவராத்திரி பக்திபூர்வம்

மன்னார், மார்ச் 9
பாடல்பெற்ற புனிதத்தலமான மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் நேற்றையதினம் சிவராத்திரி வழிபாடுகள் பக்திபூர்வமாக இடம்பெற்றன.
உலகம் முழுவதும் இருந்து திருக்கேதீஸ்வரத்துக்கு வருகைதந்த சிவ பக்தர்கள் மன்னார் பாலாவியில் நீராடி பாலாவித் தீர்த்தநீரை திருக்கேதீஸ்வர ஆலயத்தினுள் உள்ள மகாசிவலிங்கத்துக்கு நீர்

11



## வடக்கின் போர் கிரிக்கெட்: சென்.ஜோன்ஸ் ஆதிக்கம்!

யாழ்ப்பாணம், மார்ச் 9
வடக்கின் போர் என்று வர்ணிக்கப்படும், யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றிக்கான வாய்ப்புகளை அதிகப்படுத்தியுள்ளது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் ஆரம்பமானது.

11

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வெங்காயப்பூ விற்பனை அமோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

திருநெல்வேலிப் பொதுச்சந்தையில் வெங்காயப் பூக்களின் வரத்து அதிகரித்துள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒரு கிலோ வெங்காயப் பூ 240 ரூபா முதல் 250 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது. வெங்காயப் பூ கொள்வனவில் நுகர்வோரும் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-66)

### கோத்தாபய விரட்டப்பட்டது

## சர்வதேச சூழ்ச்சியால் அல்ல மக்களின் பேரெழுச்சியாலேயே

### வசந்த முதலிகே பதிலடி



**கொழும்பு, மார்ச் 9**

**சூழ்ச்சியால்தான் ஆட்சியிலிருந்து விரட்டப்பட்டார் என முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கூறுவது நகைச்சுவைத்தனமாகும். மக்கள் எழுச்சியாலேயே அவர் விரட்டப்பட்டார் என்று மக்கள் போராட்ட இயக்கத்தின் செயற்பாட்டாளரான வசந்த முதலிகே தெரிவித்தார்.**

கோத்தாபய ராஜபக்சவால் வெளியிடப்பட்டுள்ள நூல் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தான் எழுதிய நூலுக்கு கோத்தாபய ராஜபக்ச தெரிவு செய்துள்ள தலைப்பு தவறு. 'மரணபீதியில் ஓடிய நான்' எனும் தலைப்பை தான் அவர் தெரிவுசெய்திருக்க வேண்டும். அவரின் நூல் நகைச்சுவை நூலாகும். எனவே, எமது வாசிகசாலைகளில் உள்ள நகைச்சுவை நூல்களுடன் அவரின் நூலையும் வைப்போம். அவரின் ஆட்சியில் உண்பதற்கு உணவு இருக்கவில்லை, வரிசை யுகம் உருவானது. விவசாயம் அழிந்தது. பணவீக்கம் அதிகரித்தது. இதனால் மக்கள் கிளர்ந்தெழுந்தனர். எனவே, சூழ்ச்சி என குப்பைத்தனமான கருத்துகளைக்கூறி மக்களின் போராட்டத்தை கொச்சைப்படுத்தக்கூடாது. சீனி வரி மோசடி, இரசாயன உரப்புரட்சி, கள்ளக்குடும்பம் என்பன தொடர்பிலும் அவர் நூல் எழுதினால் சிறப்பு - என்றார். (ஒ-44)

## வலம்புரிச் சங்குடன் தேரர் கைது

கொழும்பு, மார்ச் 9

ஒரு கோடி ரூபா பெறுமதியான வலம்புரிச் சங்குடன் தேரர் ஒருவர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு - கல்குடாப் பகுதியில் விற்பனைக்காக வலம்பரிச் சங்கைக் கொண்டுவந்தபோதே அவர்கள் கைது செய்யப்பட்டனர். (ச-இ)

## வெளிநாட்டு வருவாய் பெப்ரவரியில் உயர்வு

கொழும்பு, மார்ச் 9

வெளிநாடுகளிலுள்ள இலங்கைப் பணியாளர்களால் கடந்த பெப்ரவரி மாதத்தில் 476.2 மில்லியன் அமெரிக்க டொலர் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இது கடந்த 2023 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 16.88 சதவீத அதிகரிப்பாகும்.

குறித்த மாதத்தில் சுற்றுலாப் பயணிகளின் மூலம் இலங்கை 345.7 மில்லியன் அமெரிக்க டொலர் ஈட்டியுள்ளது.

இந்தத் தொகை கடந்த வருடத்தின் பெப்ரவரி மாதத்துடன், ஒப்பிடுகையில், 113. 92 சதவீத அதிகரிப்பாகும் என்றும் மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## இந்தியா கைவிட்டது; ஆதங்கத்தில் கோத்தா

கொழும்பு, மார்ச் 9



இலங்கையிலிருந்து வெளியேறி மாலைதீவுக்குச் சென்று அங்கிருந்து சிங்கப்பூர் செல்வதற்குத் திட்டமிட்டிருந்தபோதும், இந்தியா சிங்கப்பூருக்குச் செல்வதற்கான தனி விமானத்துக்கு அனுமதி வழங்கவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

'என்னைப் பதவியிலிருந்து கவிழ்க்கச்சதி' என்ற நூலில் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய குறிப்பிட்டுள்ளதாவது:

2022ஆம் ஆண்டு ஜுலை 8ஆம் திகதி பாதுகாப்புப் படைத் தலைமையகத்தை ஜனாதிபதி மாளிகைக்கு இடம்மாற்றுமாறு பாதுகாப்புச் செயலர் கமால் குணரத்னவுக்கு உத்தரவிட்டேன். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முப்படைப் பிரதானிகளையும் ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்தேன். 9ஆம் திகதி காலை 8.30 மணிக்கு ஊரடங்கு தளர்த்தப்பட்டது. காலை 10.30 மணியளவில் பாதுகாப்புச்செயலரும் பாதுகாப்புப் பிரதானிகளும் என்னை உடனடியாக வெளியேறுமாறு கூறினர். எனது பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தாங்கள் இரண்டு சூட்கேஸ்களில் அத்தியாவசியமான பொருள்களை எடுத்து வைத்திருப்பதாகக் கூறினர். நாங்கள் கீழ்த்தளத்துக்கு வந்தபோது பஸிலும் எம்முடன் இணைந்துகொண்டார். முன் வாசல் கதவை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆக்கிரமித்திருந்தனர். நாங்கள் பின் வாசல் வழியாக கடற்படை முகாமுக்குச் சென்றோம். இரண்டு படகுகள் எமக்காகக் காத்திருந்தன. நாங்கள் ஒன்றில் ஏறினோம். யாரும் அறிந்துகொள்ளாதபடி இரண்டும் எதிரெதிர் திசைகளில் பயணமாகின.

கொழும்புத் துறைமுகத்திலிருந்து திருமலைத் துறைமுகத்துக்குச்சென்றோம். இரவு அங்கு தங்கிய பின் மறுநாள் உலங்குவானூர்தியில் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்து, அங்கு இரவைக் கழித்த பின் ஜுலை 12ஆம் திகதி அதிகாலை 3 மணியளவில் விமானப்படை விமானம் மூலம் மாலைதீவு விமான நிலையத்தைச் சென்றடைந்தோம்.

மாலைதீவு அரசாங்கம் எமக்காக தனித்தீவொன்றில் அமைக்கப்பட்ட விடுதியில் தங்குவதற்கு ஏற்பாடு செய்திருந்தது. ஒரு படகு மூலம் அந்த விடுதியை அடைந்தோம். தனியார் விமானம் ஒன்றின் மூலம் சிங்கப்பூர் செல்லத் திட்டமிட்டிருந்தோம். ஆனால் இந்தியா, அந்தத் தனியார் விமானத்தை மாலைதீவிலிருந்து பயணிப்பதற்கு அனுமதி வழங்கவில்லை.

ஒரு வர்த்தக விமானம் மூலம் சிங்கப்பூர் செல்வதற்கு பயணச்சீட்டுகளைக் கொள்வனவு செய்யுமாறு நான் கூறினேன். அதன்பிரகாரம் சவூதி எயார்லைன்ஸ் விமானம் மூலம் சிங்கப்பூரை அடைந்தோம். மாலைதீவு அரசாங்கம் எமது பயணத்துக்குரிய சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தது. சிங்கப்பூரில் ஒரு விடுதியில் நாங்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கிருந்தவாறு நான் சபாநாயகருடன் தொடர்பு கொண்டு ரணிலைத் தற்காலிக ஜனாதிபதியாக நியமித்தேன் என்று விவரித்துள்ளார். (ஒ-6)

## வெப்பநிலை உக்கிரம்; கண்களைக் காக்கவும்

கொழும்பு, மார்ச் 9

தற்போதைய கடும் வெப்பநிலை காரணமாக அதிக சூரிய ஒளியுடன் வரும் புற ஊதாக் கதிர்களால் கண் பார்வைக்கு பாதிப்பு ஏற்படலாம். கண்களைப் பாதுகாக்க மக்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு கண் மருத்துவ நிபுணர் மருத்துவர் முதித குலதுங்க தெரிவித்துள்ளார்.

அதிக சூரிய ஒளி வெளிப்படுவதனால் கண் பார்வைக் குறைபாடு ஏற்படலாம். அதிக சூரிய ஒளியால் கண்கள் வறண்டு போகாமல் இருக்க தண்ணீர் அருந்துவதுடன், புற ஊதாக் கதிர்கள் கண்களுக்குள் படாமல் இருக்க கண்ணாடி மற்றும் தொப்பி ஆகியவற்றைப் பயன்படுத்துவது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

### ரூ. 3 கோடி பெறுமதியான

## ஐஸ் போதையுடன் இருவர் கைது

கொழும்பு, மார்ச் 9

மூன்று கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் வத்தளை - எலகந்த பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

'யுக்திய' நடவடிக்கையின் கீழ் இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபர்களிடமிருந்து 3 கிலோ ஐஸ் போதைப் பொருள் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 27 மற்றும் 31 வயதுடையவர்கள் என்றும் அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## மகனின் மருத்துவமனையில் போலி மருத்துவரான தந்தை!

### பொலிஸாரிடம் சிக்கினார்

மருத்துவர் போன்று நடித்து மருத்துவ நிலையம் ஒன்றை நடத்தி வந்த ஒருவர் பியகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பதிவுசெய்யப்பட்ட மருத்துவரான தனது மகனின் பெயரைப் பயன்படுத்தி இவர் இந்தச் சட்டவிரோத மருத்துவ நிலையத்தை நடத்தி வந்துள்ளார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை மஹர நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-இ)

## புலம்பெயர் தமிழரைக் கவர கனடா செல்கிறார் அநுர

கொழும்பு, மார்ச் 9

இலங்கையிலிருந்து தமிழ் மக்கள் அதிகமாக புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் ஒன்றான கனடாவில் அங்குள்ள தமிழ் மக்களுடன் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க சந்திப்புகளை நடத்தவுள்ளார்.

எதிர்வரும் 23ஆம் திகதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான உயர்மட்டக் குழுவொன்று கனடாவுக்குச் செல்லவுள்ளது என்று அந்தக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கனடா ரொறண்டோ நகரில் நடைபெறும் இந்த நிகழ்வில் 'தீர்வு நோக்கிய மக்கள் சக்தியை கட்டியெழுப்புவோம்' என்னும் கருப்பொருளில் அநுரகுமார திஸாநாயக்க உரையாற்றவுள்ளார்.



இந்தச் சந்திப்புகள் ஜே.வி.பி. மீது தமிழ் மக்கள் கொண்டுள்ள சில கசப்பான அனுபவங்களை மறுசுழற்சிக்கு உட்படுத்தத்தூண்டும் என்று அரசியல் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு இலங்கையர்கள் கொடூரப் படுகொலை!

## கனடாவில் சோகம்

### 19 வயது சந்தேகநபர் கைது

**கொழும்பு, மார்ச் 9**

**கனடாவின் ஒட்டாவா புறநகர்ப் பகுதியிலுள்ள வீடொன்றில் கூரிய ஆயுதமொன்றால் தாக்கப்பட்டு இலங்கையைச் சேர்ந்த தாய் உட்பட நான்கு குழந்தைகளும் அந்தக் குடும்பத்துடன் தொடர்புடைய மற்றொருவருமாக 6 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் இலங்கைப் பிரஜைகள் என்றும் அவர்கள் அண்மையில் கனடா வந்தவர்கள் என்றும் கனடாவுக்கான இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

தர்ஷனி திலன்திகா ஏக்கநாயக்க (வயது-45). இனுகா விக்ரமசிங்க (வயது- 7). அஸ்வினி விக்ரமசிங்க (வயது-4). ரினியான விக்ரமசிங்க (வயது-2). இரண்டு மாதங்களான கெலி விக்ரமசிங்க ஆகியோரும் இந்தக் குடும்பத்துடன் அதிகம் அறிமுகமில்லாத 40 வயதான காமினி அமரக்கோன் என்பவரும் சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

சம்பவத்தில் உயிரிழந்த பெண்ணின் கணவரான தனுஷ்க விக்ரமசிங்க படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பில் 19 வயதான இலங்கையைச் சேர்ந்த ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் கனடாவில் கல்விபயிலும் மாணவராவார்.


அவர் மீது ஆறு கொலைக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன என்றும் சந்தேகநபர் படுகொலை செய்யப்பட்ட குடும்பத்துக்கு அறிமுகமானவர் என்றும், அவர்களின் வீட்டில் வசித்து வந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை அந்த நாட்டுப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ச-இ)

## கோத்தாபயவின் புத்தகத்துக்கு கிராக்கி

கொழும்பு, மார்ச் 9

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் எழுதப்பட்ட 'என்னை ஜனாதிபதிப் பதவியிலிருந்து வெளியேற்ற சதி' என்ற புத்தகத்தின் முதல் பதிப்பு நேற்றுமுன்தினமே முற்றாக விற்றுத் தீர்ந்துவிட்டது என்றுவிஜித யாப்பா பதிப்பகத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (ச-இ)



## தாய் துஷ்பிரயோகம்; மகன் கைது

கொழும்பு, மார்ச் 9

தனது தாயாருக்குக் கொலை மிரட்டல் விடுத்து பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட குற்றச்சாட்டில் இளைஞனொருவன் களுத்துறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளான்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் களுத்துறையை சேர்ந்த 20 வயதுடையவர் என்றும் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## தடைகளைத் தாண்டிய பெண் ஆளுமைகள்; இலங்கையர் தெரிவு

கொழும்பு, மார்ச் 9

தெற்காசியாவில் தடைகளைத் தாண்டி சாதித்து- ஏனைய பெண்களுக்கு முன்னுதாரணமாகத் திகழும், பெண் ஆளுமைகள் பட்டியலில் இலங்கையர் இருவர் இடம்பிடித்துள்ளனர்.

தொழில்முனைவோர், ஊடக நிர்வாகிகள், பிரதம நிறைவேற்று அதிகாரிகள் உள்ளிட்ட மிக முக்கியமான பதவிகளை வகிக்கும் சிறந்த ஆளுமைகள் பட்டியலை உலக வங்கி வெளியிட்டுள்ளது. 11 பேர் அடங்கிய இந்தப் பட்டியலில் இலங்கைப் பெண்கள் இருவருக்குக் கிடைத்த சர்வதேச அங்கீகாரம் இதுவாகும் என்று உலக வங்கி தெரிவித்துள்ளது. (ச-இ)

## மருத்துவமனை வளாகத்தில் தீப்பரவல்

யாழ்ப்பாணம், மார்ச் 9

புங்குடுதீவு மருத்துவமனை வளாகத்திலுள்ள சுவாலை விட்டு எரிந்த தீயைக் கடற்படையினரும் பொலிஸாரும் இருமணி நேரம் போராடி அணைத்தனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.

மருத்துவமனைக்கு அருகில் உள்ள காணியை வாகனம் மூலம் துப்புரவு செய்த காணி உரிமையாளர் தீ வைத்துவிட்டு வீட்டுக்குச் சென்றுள்ளார். காற்றினால் தீ பரவி அயலில் உள்ள மருத்துவமனை வளாகத்தில் காணப்பட்ட பயன்தரு மரங்களில் பரவி சுவாலை விட்டு எரிந்தது.

தீயைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் மருத்துவமனைப் பொறுப்பதிகாரி கடற்படையினருக்கும் பொலிஸாருக்கும் அறிவித்தார். இதையடுத்து அவர்கள் அங்கு வந்து தீயைக் கட்டுப்படுத்தினர். (ஒ-9)

## யானை தாக்கி ஒருவர் காயம்

கிளிநொச்சி, மார்ச் 9

கிராஞ்சி - சிவபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யானை தாக்கியதில் நபர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார். சிவபுரம் பகுதியில் தனிமையில் வசித்து வந்த 50 வயது மதிக்கத்தக்க நபரே இவ்வாறு யானைத் தாக்குதலுக்குள்ளானார் எனக் கிளிநொச்சி வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (ப-113)

## பு தினம் தெரியுமோ?

**லைற் போஸ்ட் ஒண்டுக்கு கீழ ஒராள் கனநேரமா எதையோ தேடிக்கொண்டு நிண்டிருக்கிறார். பாவம், தனியத்தேடுறார், உதவி செய்வம் என்டு இன்னொரு ஆள் அவருக்குக் கிட்டப் போயிருக்கிறார்.**

**"அண்ணை இவ்வளவு நேரமா என்னத்தைத் தேடுறீங்கள்?" எண்டு கேட்டிருக்கிறார். அதுக்கு அந்தாள் "மோதிரத்தை விழுத்திப்போட்டன். அதைத்தான் தேடுறன்" எண்டிட்டு தொடர்ந்து தேடினபடி இருந்திருக்கிறார். உதவிசெய்யப்போனவரும் சேர்ந்து தேடினால், மோதிரம் அம்பிடவேயில்லை.**

**"அண்ணை, இதில தான் மோதிரத்தை விழுத்தினீங்களோ?" எண்டு மற்றவர் கேக்க,**

**"சீச்சி, நான் இதில விழுத்தேலை" எண்டிருக்கிறார்.**

**"அப்ப ஏன் இதில தேடுறீங்கள்?" எண்டு இவர் கோபமாக் கேட்டிருக்கிறார். அதுக்கு அவர் சொன்னாராம், "அங்க ஒரே இருட்டா இருக்கு. இருட்டுக்குள்ள எப்பிடித் தேடுறது. அதுதான் இந்த லைற் வெளிச்சமுள்ள இடத்தில தேடுறன்"**

**இப்பிடி ஆத்தில துலைச்சுப் போட்டு கடலில தேடுறது எங்களுக்கு வாடிக்கையாப் போட்டுது. ஆனால் எல்லா விசயத்தையும் அதே இடத்தில தேடினாலும் கிடைக்காது. சிலதை வேற இடங்களிலையும் தேட வேண்டியிருக்கு. எங்கட கடலுக்குள்ள இந்திய மீனவர்கள் வந்து, வலையை அறுக்கிறதும், கடலின்ர அடிமட்டும் துழாவி மீன் குஞ்சுகளைக் கூட விடாமல் வாரியெடுத்துக் கொண்டு போறதும் பெரிய பிரச்சினையாக் கிடக்குது. அதை நிப்பாட்டுறதுக்கு எங்கட மீனவர்கள் எவ்வளவோ போராடியும் ஒண்டும் உருப்படியா நடக்குதில்லை. இந்த நிலைமையிலதான் கிட்டடியில கறுப்புக்கொடிப்போராட்டம் ஒண்டுக்கு அழைப்பு விட்டவை. உண்மையில இந்தக் கறுப்புக்கொடிப் போராட்டத்துக்கு மீனவர்கள் கனபேருக்கு உடன்பாடில்லை. ஏனெண்டால், கடலில நிண்டு நாங்கள் கறுப்புக் கொடி காட்டுறதால என்ன நடக்கப் போகுது? எண்டது அவையின்ர நிலைப்பாடு. ஆனாலும் ஒரு அமைச்சர் தான், தன்ர செலவில 200 லீற்றர் மண்ணெண்ணெயும் குடுத்து, தன்ர கட்சி சார்பான மீனவர்களைக் கூப்பிட்டு கடலில போய்க் கறுப்புக்கொடி காட்டச் சொன்னவராம்.**

**ஒரு அமைச்சர் ஏன் இப்பிடி மீனவரைத் தூண்டிவிடோணும்? காரணம் இருக்கு. ஏனெண்டால் இந்த மீனவர் பிரச்சினையைத் தீர்த்துவைக்க வேண்டிய ஆளே அமைச்சர்தான். இந்தியாவில இருந்து வாற மீனவரை வரவிடாமல் பாருங்கோ எண்டு அமைச்சர் ஓர்டர் போட்டால், நேவிக்காரர் செய்யத்தான் வேணும். அப்பிடி நேவிக்காரர் கண்ணும் கருத்துமா காவல் இருந்தால் இந்திய மீனவர் கச்சதீவைத் தாண்டி வரவே ஏலாது. ஆனால் அவை வடமாரட்சி கிழக்கு மட்டும் ஞர் வாற மாதிரி ஈஸியா வந்திட்டுப் போயினம் எண்டால் அதுக்குக் காரணம், நேவி அவையைப் பெரிசாத் தடுக்கிறேலை. அமைச்சரும் தடுக்கச் சொல்லி ஓர்டர் போடுறேலை. ஏனெண்டால் அமைச்சர் அயல்நாட்டைப் பகைக்க ஏலாது. சில விசயங்களில அவருக்கு அயல்நாடு தேவை. அதாலதான் மீனவரின்ர கோபம் தன்ர பக்கம் திரும்பாமல் இருக்க, இப்பிடி திசைதிருப்ப கடலில போராடுங்கோ எண்டு அமைச்சர் ஒண்டுக்கும் உதவாத போராட்டங்களுக்குத் தூண்டுறார். உண்மையில மீனவர்கள் அமைச்சருக்கு எதிராத்தான் போராடோணும். அப்பதான் அவர் ஏதும் தீர்வைத் தர யோசிப்பார். அதைவிட்டிட்டு இருட்டுக்க துலைச்சுப்போட்டு லைற் உள்ள இடத்தில தேடுறமாதிரி கடலில போய் போராடினால் அது ஆருக்குத் தெரியப்போகுது?**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணக் கல்லூரி



சென்.பற்றிக்ஸ் கல்லூரி

## சென்.பற்றிக்ஸ் – யாழ்ப்பாணக் கல்லூரி
# ஒரு நாள் ஆட்டம் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 9

ராஜன் - கதிர்காமர் வெற்றிக்கிண்ணத்துக்கான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்களைக் கொண்ட 31 ஆவது கிரிக்கெட் ஆட்டம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கும், ரி-20 கிரிக்கெட் போட்டி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கும் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதுவரை காலமும் நடைபெற்ற ஒருநாள் போட்டிகளில் 22 தடவைகள் சென். பற்றிக்ஸ் கல்லூரியும், 7 தடவைகள் யாழ்ப்பாணக் கல்லூரியும் வெற்றி பெற்றுள்ளன. 1 போட்டி இடைநிறுத்தப்பட்டது.

ரி-20 கிரிக்கெட் போட்டித் தொடரில் சென். பற்றிக்ஸ் கல்லூரி இரண்டு தடவைகளும் யாழ்ப்பாணக் கல்லூரி ஒரு தடவையும் வெற்றிபெற்றுள்ளன.

இவ்வருடம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கு ஆர்.சியன்நசன்னும், யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கு எஸ்.நர்த்தனனும் தலைமை தாங்குகின்றனர். (ஒ-இ)

# மதிப்பளிப்பு விழாவும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், மார்ச் 9

முன்னாள் கிராம அலுவலர் சமூகச் சிற்பி வீ. எஸ்.துரைராஜாவுக்கு, தென்மர் நண்பர்கள் நடத்தும் மதிப்பளிப்பு விழா மற்றும் நூல் வெளியீடு என்பன கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை மண்டபத்தில் இன்று சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளன.

சங்கரன் தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக மன்னார் மாவட்ட செயலர் க.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை, தென்மராட்சிக் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அபிராமி இராசதுரை ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-9)

# சமாதான நீதிவான் சங்கத்துக்கு காணி

கிளிநொச்சி, மார்ச் 9

வட இலங்கை சமாதான நீதிவான்கள் சங்கத்துக்கு கிளிநொச்சி அறிவியல் நகரில் அரசாங்கத்தால் காணியொன்று நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வழங்கப்பட்டது.

அதனை உத்தியோகபூர்வமாகக் கையேற்று ஆதனத்தின் விளம்பரப் பலகை சங்க நிர்வாகிகளால் நடுகை செய்யப்பட்டது. (ஒ-110)

# விழிப்புணர்வு நிகழ்வு

சாவகச்சேரி, மார்ச் 9

சாவகச்சேரி கோயிற்குடியிருப்புகிராம அபிவிருத்திச்சங்கத்தின் ஏற்பாட்டில் இளைஞர்களுக்கான விழிப்புணர்வூட்டும் நிகழ்வு உதய சூரியன் சனசமூக நிலையத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பொதுச்சுகாதார தாதிய உத்தியோகத்தர், குடும்பநல உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பங்குபற்றி கருத்துரைகளை வழங்கினார்கள். (ஒ-9)




# வேகக்கட்டுப்பாட்டை இழந்து நல்லூரில் லொறி விபத்து

யாழ்ப்பாணம், மார்ச் 9

வேகக்கட்டுப்பாட்டை இழந்த லொறியொன்று கடைக் கட்டடத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து நல்லூர்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை நடந்துள்ளது.

பருத்தித்துறை வீதியூடாக யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த லொறியே நல்லூர் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள வளைவில் திரும்பும்போது வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியிலிருந்து விலகி அருகிலிருந்த கடைக் கட்டடத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது. லொறியின் சாரதி காயங்களுக்குள்ளான நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் விபத்தில் வேறு எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார்விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-17,66)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கக்கூடும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் மேற்கொள்வதைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். முயற்சிகள் சாதகமாக முடியும். செலவுகள் அதிகரிக்கும். சமாளித்துவிட முடியும்.

**மிதுனம்:** அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தாய்வழியில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்லவும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**கடகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். உற்சாகமாகக் காணப்படுவீர்கள். வியாபாரம் எப்போதும்போல் நடைபெறும். விநாயகரை வழிபடுவது நன்று.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உடல்நலனில் கவனம் தேவை.

**கன்னி:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். எதிரிகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். வியாபாரம் வழக்கம்போலவே இருக்கும்.

**துலாம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.இலாபம் கிடைப்பது மகிழ்ச்சி தரும். தட்சிணாமூர்த்தி வழிபாடு நன்று.

**விருச்சிகம் :** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு வருத்தம் தரும். அலைச்சல் ஏற்படும். சில சங்கடங்கள் ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**தனுசு:** மகிழ்ச்சி தரும் நாள். ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். வீண்செலவுகள் ஏற்படும். முடிவு ஒன்றைத் துணிச்சலுடன் எடுப்பீர்கள். உடல் நலனில் கவனம் தேவை.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடமுடியும். உறவுகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும். செலவு செய்ய நேரிடும்.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். மனக்கசப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. அனுசரணையாக நடந்து கொள்ள முயற்சி செய்யவும். சில பிரச்சினைகள் ஏற்படும்.

**மீனம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். அனுசரித்துச் செல்வது நல்லது. தாயின் தேவையை நிறைவேற்ற சிறிது அலையை வேண்டியிருக்கும். மற்றவர்களுடன் வீண் சர்ச்சைகளில் ஈடுபடவேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மாறுபடும் நீதி

இந்த நாட்டின் அரசமைப்பில் எத்தகைய சட்டங்கள் இருந்தாலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதிலேயே அதன் வெற்றி தங்கியிருக்கின்றது. குறிப்பாக பொலிஸார் சட்டத்தை எப்படிக் கையாள்கின்றார்கள் என்பதிலிருந்தே அந்த நாட்டின் சீத்துவத்தைக் கண்டறியலாம். இலங்கையின் அரச திணைக்களங்கள் அனைத்தும் சிங்கள - பௌத்த மேலாண்மையை நிலைநிறுத்துவதையே மூச்சாகக் கொண்டு செயலாற்றுகின்றன. ஒவ்வொரு திணைக்களமும் அதை வெவ்வேறு வடிவங்களில் முன்னெடுக்கின்றன. பொலிஸ் திணைக்களம் அதில் முதன்மையானது. இந்த நாட்டில் இனவாதத் தீயை விதைத்ததில் அந்தத் திணைக்களத்துக்குப் பெரும் பங்குண்டு. போரின் பின்னரும் அந்தத் திணைக்களம் இனப்பாகுபாட்டுடன் தான் விடயங்களை அணுகி வருகின்றது. இதுதொடர்பில் பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டும் அந்தத் திணைக்களம் திருந்துவதாக இல்லை. பொலிஸ் திணைக்களத்தின் மீதான நம்பிக்கையற்றுப் போவதற்கும் அந்தத் திணைக்களத்தின் செயற்பாடுகளே காரணமாக இருக்கின்றன.

வெடுக்குநாறிமலை விவகாரம் அண்மைக்காலமாக பேசுபொருளாகியிருக்கின்றது. தமிழர் வரலாற்றிடங்களை கைப்பற்றி அதைச் சிதைப்பதும் பௌத்த தொல்பொருள் இடமாக மடைமாற்றுவதும் எனப் போரின் பின்னரான தமது புதிய நிகழ்ச்சிநிரலை சிங்கள - பௌத்த பேரினவாத அரசு முன்னெடுத்துவருகின்றது. அந்த நிகழ்ச்சிநிரலில் அகப்பட்டுக்கொண்ட இடங்களில் ஒன்றுதான் வெடுக்குநாறிமலை. இந்த ஆலயத்தை முடக்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் வெற்றிகரமாகத் தாண்டினாலும் திரும்பத் திரும்ப இடையூறுகள் விளைவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆலயத்தின் வழிபாட்டுக்குச் செல்ல அமைக்கப்பட்ட ஏணி விவகாரத்தில் தொடங்கி, ஆலயத்தின் சின்னங்களை அடித்துடைத்தது என அந்த ஆலயத்தின் மீதான ஆக்கிரமிப்பின் வெளிப்பாடுகள் ஏராளம். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நெடுங்கேணி பொலிஸார் நடந்து கொண்ட விதம் என்பது வெளிப்படையாகவே பக்கச்சார்பானது. இனப்பாகுபாட்டுடன் நடந்துகொண்டார்கள். பௌத்த - சிங்கள மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கு அவர்கள் துணைபோனார்கள். வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விவகாரம் நீதிமன்றத்துக்குச் சென்றது. நீதிமன்றிலே பொலிஸாரின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. ஆலயத்தில் புதிய கட்டுமானங்கள் மேற்கொள்ளாமலும், தொல்பொருள் சின்னங்களுக்குச் சேதம் ஏற்படுத்தாமலும் வழிபாடுகளை நடத்தமுடியும் என நீதிமன்றம் மீண்டுமொரு கட்டளையிட்டிருக்கின்றது.

இதற்கிடையில் 'வெடுக்குநாறிமலை சிங்களவர்களின் தொன்மையான பிரதேசம். தமிழர்கள் அதை ஆக்கிரமித்திருக்கிறார்கள். அங்கு மார்ச் 8 ஆம் திகதி மிகப்பெரிய வழிபாடு நடத்தவிருக்கிறார்கள். சிங்களவர்களே அணி திரளுங்கள்' என்று குருந்தூர்மலையில் சர்ச்சைக்குரிய ஆக்கிரமிப்பு விகாரையின் விகாராதிபதி அழைப்பு விடுத்திருந்தார். பொலிஸார் அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஜனநாயக வழியில் நடத்தப்படும் மக்கள் போராட்டங்களால் குழப்பம் விளைவிக்கப்படக்கூடும் என நீதிமன்றத்தை நாடி தடையுத்தரவு பெற முயலும் பொலிஸார் பிக்குவின் அறைகூவலுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஐ.சி.சி.பி.ஆர். சட்டத்தின் கீழ் பிக்குவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவேண்டிய நெடுங்கேணிப் பொலிஸார், ஆலயத்துக்கு வழிபாடுகளை ஏற்பாடு செய்யச் சென்றவர்களைக் கைது செய்திருக்கின்றார்கள். அவர்கள் காட்டுப்பகுதிக்குள் பிரவேசித்தார்கள் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து கைது செய்திருக்கின்றார்கள். பொலிஸார் ஏன் இவ்வாறு கைதுசெய்திருக்கின்றார்கள் என்பது வெளிப்படையானது. பிக்குகள் தலைமையில் வெடுக்குநாறிமலையை ஆக்கிரமிக்கக் காத்திருக்கும் சிங்களவர்களுக்கு எந்தவொரு இடையூறும் ஏற்படக்கூடாது என்பதற்காகவும், வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி வழிபாடு நடக்கக்கூடாது என்பதற்காகவுமே ஆலயப் பூசகர் உட்பட 4 பேரைக் கைது செய்திருக்கின்றார்கள். இப்படி பௌத்தத்தை பாலூட்டி சீராட்டி வளர்க்கும் பொலிஸ் திணைக்களம், சிறுபான்மையினரின் மதங்களை நசுக்கும் பணியைத் திறம்படச் செய்துகொண்டிருக்கிறது. சட்டத்தின் ஆட்சியைக் காப்பாற்றவேண்டிய பொலிஸார், இப்படி ஒரு மதப்பரப்புரையாளர்களாக மட்டுமே செயற்பட்டால், நாட்டில் நல்லிணக்கம் என்பது எப்போதைக்கும் சாத்தியமேயில்லை.




# நீதிமன்ற உத்தரவுகளை மீறும் நெடுங்கேணிப் பொலிஸார்

## சைவ மகாசபை கண்டனம்

**யாழ்ப்பாணம், மார்ச் 9**

**நீதிமன்ற உத்தரவுகளையும் மீறி தன்னிச்சையாகச் செயற்பட்ட நெடுங்கேணிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸார் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அகில இலங்கை சைவ மகாசபை வலியுறுத்தியுள்ளது.**

இது தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் தொன்றுதொட்டு தமிழ்ச் சைவர்கள் வழிபட்டுவரும் ஆதிசிவன் கோவிலின் மகா சிவராத்திரி வழிபாடுகளுக்குச் சென்ற பூசகர் மிக மோசமான முறையில் கைது செய்யப்பட்டமையையும், ஆலய பரிபாலன சபையினரின் பூசை ஏற்பாடுகளுக்கு இடையூறுவிளைவிக்கப்பட்டு துப்பாக்கிமுனையில் அச்சுறுத்தப்பட்டமையும் சைவசமயிகளுக்குத் தாங்கொணாத வலியை ஏற்படுத்தியுள்ளது. இது இலங்கையின் சைவசமயிகளின் வழிபாட்டு உரிமைக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகும். அதேநேரம் சைவ சமய மதகுருவை மோசமாக நடத்தி கைதுசெய்தமை மன்னிக்க முடியாத பாரதூரமான சம்பவமாகும். உடனடியாகப் பூசகர் மதிமுகராசாவை விடுதலை செய்யவேண்டும் - என்றுள்ளது. (ஒ-125)

## கோப், கோபா குழுக்களுக்கு புதிய தலைவர்கள்

கொழும்பு, மார்ச் 9

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவான கோப் குழுவுக்கு புதிய தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை அரசாங்கக் கணக்குக் குழுவான கோபா குழுவுக்கு புதிய தலைவராக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ச-இ)

## 'கப்புட்டு காக்கா' நூலை எழுதுங்கள்

கொழும்பு, மார்ச் 9

சிறுவர் கதையாக 'கப்புட்டு காக்கா' எனும் நூலை எழுதுமாறு பஸில் ராஜபக்சவிடம் கோரிக்கை விடுக்கின்றோம் என்று மக்கள் போராட்ட இயக்கத்தின் ஏற்பாட்டாளரான வசந்த முதலிகே தெரிவித்தார்.

பஸில் ராஜபக்ச நாடு திரும்பியுள்ளதால் அவரால் இதைச் செய்யமுடியும் எனவும் நகைச்சுவைப் பாணியில் கருத்து வெளியிட்டார். 'மிக்' விமான கொடுக்கல் - வாங்கல், ரணில் விக்கிரமசிங்கவைத் தலையில் தூக்கி வைத்துப் பயணிக்கும் அரசியல் பயணம் தொடர்பிலும் ராஜபக்சக்கள் நூலை எழுதினால் நல்லது. அப்போதுதான் கோத்தாபய வால் எழுதப்பட்ட நூல் முழுமை பெறும்' என்றும் அவர் கூறினார். (ஒ-44)

## இலங்கை - தாய்லாந்து ஒப்பந்தத்துக்கு எதிராக மனு

கொழும்பு, மார்ச் 9

இலங்கை - தாய்லாந்து வர்த்தக ஒப்பந்தத்துக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதைத் தடுக்கும் உத்தரவை பிறப்பிக்கவேண்டும் என வலியுறுத்தி உயர்நீதிமன்றத்தில் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் தாய்லாந்துப் பிரதமர் இலங்கை வந்திருந்த போது, தமது சந்தை வாய்ப்புகளை அதிகரிப்பதற்காக இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## விபத்துகளால் 341 பேர் சாவு

இந்த ஆண்டின் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் மாத்திரம் வீதி விபத்துகளால் 341 பேர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு 2 ஆயிரத்து 557 பேர் வீதி விபத்துகளால் உயிரிழந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-6)

### நாளை

10.03.2024

ஞாயிற்றுக்கிழமை

மாசி–27

சுபநேரம் : 09.23 - 10.53

ராகுகாலம் : 04.53 - 06.23

அமாவாசை விரதம்

### நாளொரு நல்வார்த்தை

எல்லோரையும் திருப்திப்படுத்த
நினைப்பவனால்
வாழ்க்கையில் வெற்றி
பெறமுடியாது

— லெனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணில் தேர்தலில் போட்டியிடமாட்டார்

### ஐ.ம.ச. எதிர்வுகூறல்

கொழும்பு, மார்ச் 9

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடமாட்டார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி தேசிய அமைப்பாளர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரணில் விக்கிரமசிங்க போட்டியிடமாட்டார், தோல்வி எனத் தெரிந்தால் அதில் போட்டியிடாமல் இருக்கும் முடிவை 2005ஆம் ஆண்டிலேயே அவர் எடுத்து விட்டார்.

தற்போது ஆய்வு நடத்துகின்றார். அதில் தோல்வி எனத் தெரிந்தால் போட்டியிடமாட்டார். 2020 பொதுத்தேர்தலில் அவர் களமிறங்கும் முடிவில் இருக்கவில்லை. ஆனால் கொழும்பில் ஒரு ஆசனம் ஐ.தே.க.வுக்கு கிடைக்கும் என நாம்கூட நம்பினோம்.

ஆக ரணில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடமாட்டார் என்பதை எழுதி வைத்துக் கொள்ளுங்கள். மொட்டுக் கட்சி வாய்ப்பு வழங்கினால்கூட அவர் வரமாட்டார். போட்டியிடப்போவதில்லை என்பதை முன்கூட்டியே அறிவித்துவிட்டால் ஜனாதிபதியின் உத்தரவுகளை சிலர் ஏற்காமல் இருக்கக்கூடும். அதனால்தான் கடைசி வரை மௌனம் காப்பார் -என்றார். (ஒ-44)

# அரசியலில் பெண்கள் இலங்கையில் கீழ்மட்டம்



### நெதர்லாந்துத் தூதுவர் சுட்டிக்காட்டு

**கொழும்பு, மார்ச் 9**

**இலங்கை வலுவான ஜனநாயக கொள்கையைக் கொண்டுள்ள போதிலும் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் மிகக்குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. இந்த நிலைமை வெகுவிரைவில் மாறவேண்டும் - இவ்வாறு நெதர்லாந்துத் தூதுவர் போனி ஹார்பாக் சுட்டிக்காட்டியுள்ளார்.**

இலங்கையில் செயல்வலுவிலுள்ள சட்டத்திற்கமைய பெண்களுக்கும், ஆண்களுக்குச் சமமான சந்தர்ப்பம் மற்றும் உரிமைகள் காணப்படுகின்றன. ஆயினும் நடைமுறையில் பெண்களுக்குக் கிடைக்கவேண்டிய இடம் கிடைப்பதில்லை.

பெண்களின் அறிவு, மனப்பாங்கு மற்றும் திறமைகளை விருத்திசெய்து கொள்வதற்காக குறிப்பாக அரசியல் துறையில் பெண்களை வலுவூட்டுவதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும்.

அதேவேளை மக்கள் மத்தியில் சமூக வலைத்தளங்களின் செல்வாக்கு அதிகரித்துள்ளதால் கருத்துச் சுதந்திரத்தை மட்டுப்படுத்தும் விதமான சட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன. மக்களின் கருத்துச் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டியது கட்டாயம் - என்றார். (ச-இ)

## அராலி சரஸ்வதி மரதன் ஓட்டம்



அராலி சரஸ்வதி இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின் மரதன் ஓட்ட நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

பாடசாலை அதிபர் கு. பாலமுருகன் தலைமையில் நடைபெற்ற மரதன் ஓட்டப்போட்டி கல்லூரியின் பிரதான வாயிலில் ஆரம்பித்து அராலி செட்டியார் மட வீதியூடாக யாழ்.- காரைநகர் வீதிக்கு வந்து அங்கிருந்து வட்டுக்கோட்டைச் சந்தியை அடைந்து அராலி வீதி வழியே மீண்டும் கல்லூரியை வந்தடைந்தது. (ச-555)

## மாணவர்களால் உதவித் திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

கைதடி, நாவற்குழி அ.த.க.பாடசாலையின் மாணவர் நாடாளுமன்றின் சமுதாய முன்னேற்ற அமைச்சினூடாக உதவித் திட்டங்கள் அண்மையில் கையளிக்கப்பட்டன.

மாணவர்கள் தாம் சேகரித்த கற்றல் உபகரணங்களை அயல் பாடசாலைகளில் கற்கும் பொருளாதாரம் நலிவுற்ற மாணவர்களுக்கு வழங்கிவைத்தனர்.

நிகழ்வில் விருந்தினராக தென்மராட்சி வலய மாணவர் நாடாளுமன்ற பொறுப்பு அலுவலர் க.ஈஸ்வரன் பங்கேற்றார். (ச)

## ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்சக்கள் இல்லை

கொழும்பு, மார்ச் 9

இந்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ச ஒருவரைக் களமிறக்காமல் இருப்பதற்கும், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்சவை களமிறக்குவதற்கும் பொதுஜன பெரமுனக் கட்சி உத்தேசித்துள்ளது.

நடைபெறவுள்ள தேர்தலில் பொதுஜன பெரமுனவுக்கான வெற்றிவாய்ப்பு குறைவு என்பதால் வாக்கு வங்கியை தக்கவைத்துக்கொள்வதற்கு ஏதுவான வகையில் வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படலாம் அல்லது ரணில்விக்கிரமசிங்கவுக்கு மொட்டுக் கட்சி ஆதரவு வழங்கலாம் எனவும் தெரியவருகின்றது. (ஒ-44)

## சில பொருள்களின் விலை குறைப்பு

அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றின் விலை நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளது என்று லங்கா சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி பால் மா, காய்ந்த மிளகாய், வெள்ளை அரிசி மற்றும் வெள்ளைச் சீனி ஆகியவற்றின் விலையே குறைக்கப்பட்டுள்ளது என்றும் சதொச நிறுவனம் தெரிவித்தது. (ச-இ)

## பெரமுனவில் பிளவு ; பஸில் நடவடிக்கை

அமெரிக்காவில் இருந்து நாடு திரும்பியுள்ள பொதுஜன பெரமுனக் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச மீண்டும் கட்சியை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் களமிறங்கியுள்ளார் என்று அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதற்கமைய ஏழு பிரிவுகளாக செயற்படும் கட்சியின் உறுப்பினர்களை ஒன்றிணைக்க நடவடிக்கை எடுத்துள்ளார். பிளவுகளுக்கான உண்மை நிலைவரங்களை அடையாளம் கண்டு, அதனைச் சரி செய்யும் நடவடிக்கையை பஸில் முன்னெடுத்து வருகிறார். இதற்கென நாடாளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சித் பண்டார மற்றும் ஜயந்த கொட்டகொட ஆகியோருக்கு, ஒன்றிணையக்கூடிய நபர்களுடன் கலந்துரையாடுவதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த பொதுத்தேர்தலில் பொதுஜன பெரமுனக் கட்சியில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவான டலஸ் அழகப்பெரும குழு, விமல் வீரவன்ஸ உள்ளிட்டோர், பிரசன்ன ரணதுங்க, நிமல் லான்சா, நாமல் ராஜபக்ச, நாலக கொடஹேவா போன்றோர் 7 பிரிவுகளாக உடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## கைதடி — கோப்பாய் வீதியில் கழிவுகளால் அசௌகரியம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

கைதடி - கோப்பாய் வீதியில் கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதால் இந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதோடு சுகாதாரச் சீர்கேடும் ஏற்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இரவு நேரங்களில் இனந்தெரியாதோர் இந்தப் பகுதியில் கழிவுப் பொருள்களைக் கொட்டிவிட்டுச் செல்கின்றனர்.


அதனை விலங்குகள் மற்றும் பறவைகள் இழுத்துச் செல்வதால் சுகாதாரச்சீர்கேடு ஏற்பட்டு வீதியால் பயணிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே உரிய அதிகாரிகள் குறித்த வீதியோரத்தில் கழிவுகள் கொட்டப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டனர். (ச-17)



மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசியப் பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி, பாடசாலை மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கல்லூரியின் முதல்வர் அருட்சகோதரர் எஸ்.சந்தியாகு தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலர் கே.கனகேஸ்வரன், எந்திரி ஏ.தேவநான்ட், கோட்டக் கல்விப் பணிப்பாளர் பி. சந்தியோகு, எந்திரி விமலேஸ்வரன் மற்றும் மருத்துவக் கலாநிதி அன்ரனிதாஸ் தீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ப-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 107 வயது முதியவர் சாவகச்சேரியில் சாவு

சாவகச்சேரியில் 107 வயது முதியவர் ஒருவர் நேற்றுமுன்தினம் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

உதயசூரியனைச் சேர்ந்த பூச்சி வேலுமுத்து என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

1917ஆம் ஆண்டு இவர் பிறந்துள்ளார். இவர் தனது 107 ஆவது வயது பிறந்த நாளை அண்மையில் வெகுவிமரிசையாக கொண்டாடியிருந்தார். இவருக்கு 10 பிள்ளைகள், 75 பேரப்பிள்ளைகள், 25 பூட்டப்பிள்ளைகள் 5 கொள்ளுப் பேரப்பிள்ளைகள் உள்ளனர்.

(ஒ-27)

நுகர்வோர் அதிகாரசபையின்

# தலைவர் பதவி விலகல்!



நுகர்வோர் விவகாரஅதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி சாந்த நிரியல்ல நேற்றுப் பதவி விலகியுள்ளார்.

வர்த்தக, வாணிப மற்றும் உணவுப்பாதுகாப்பு அமைச்சர் நளின்பெர்னாண்டோ, நுகர்வோர் விவகாரஅதிகார சபையின் தலைமைப் பதவியில் இருந்து விலகுமாறு சட்டத்தரணி சாந்த நிரியல்லவை அண்மையில் கோரியிருந்தார். இதையடுத்தே அவர் நேற்றுப் பதவியில் இருந்து விலகியுள்ளார்.

(ம)

**வீடு வாடகைக்கு**

சகல வசதிகளுடன் கூடிய வீடு ஒன்று யாழ் நகரை அண்டிய பகுதியிலோ அல்லது திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் பகுதியில் இருப்பது விரும்பத்தக்கது.

**077 215 5711**

**வாடகைத்தாய் தேவை**

**நல்ல ஆரோக்கியமான வாடகைத்தாய் தேவை.**

தங்களின் விபரம் இரகசியமாக வைக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு

தொடர்பு:- **074 004 7586**

(CS/54899) J-1

**தேவை**

வீட்டுப் பணிப்பெண் தேவை

தொடர்பு:

**077 0698 105**

(CS 28069) A-1

**மாபிள் வேலை**

**உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.**

**ஒரு சதுர அடி - 100.00 ரூபாய்.**

**077 334 1281**

(28102) J-1

**காணி விற்பனைக்கு**

உசன் கஜகேணி பிள்ளையார் கோவில் வீதி.

தொந்தியாவேட்டையில் பயன்தரும் தென்னை மரங்களுடன் காணி விற்பனைக்குண்டு.

**077 456 7091**



மட்டுவில்

**பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் தேவஸ்தானம்**

# பங்குனித்திங்கள் பொங்கல்

**சோபகிருது வருஷம் - 2024**

அம்பாள் அடியார்களே!

❖ அம்பாள் ஆலயத்தில் கடந்த 2007ம் ஆண்டு கும்பாபிசேகம் இடம்பெற்றதன் பின்னர் தற்போது 11-09-2023அன்று பாலஸ்தாபனம் செய்யப்பட்டு அபிசேக மண்டபம். ஸ்தம்ப மண்டபம். வசந்தமண்டபம் அமைத்தல் உள்ளிட்ட திருப்பணி வேலைகள் இடம்பெற்றுவருகின்றன இந்நிலையில் இவ்வருட பங்குனித்திங்கள் பொங்கல் பின்வரும் நான்கு திங்கட்கிழமைகளில் இடம்பெறவுள்ளன 18-03-2024, 25-03-2024, 01-04-2024, 08-04-2024. **பங்குனித் திங்கட்கிழமைகளில் அம்பாளுக்கு விசேட அபிசேகம் பூசை, பொங்கல் படையல், அர்ச்சனை, நேர்த்திக்கடன் வழிபாடுகள்** என்பன வழமை போன்று இடம்பெறும் (திருவீதியுலா தவிர).

❖ பங்குனித்திங்கள் பொங்கல் வழிபாடுகள் காலை 5.00 மணிக்கு உஷத்காலப்பூசையுடன் ஆரம்பமாகி காலை. மாலை விசேடஅபிசேகம், பூசை, பொங்கல் படையல். அர்ச்சனை வழிபாடுகள் இடம்பெற்று இரவு 9.00 மணிக்கு அர்த்தசாமப்பூசையுடன் நிறைவுபெறும்.

❖ உற்சவகால தற்காலிக கடைகள் 16-03-2024 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆலய வளாகத்தில் வழங்கப்படும். கடைகளை அமைக்கவிரும்புவோர் அன்றையதினமே பங்குபற்றி தமக்குரிய வாடகைப்பணத்தை முழுமையாகச் செலுத்தி பற்றுசீட்டினைப் பெற்றுக்கொள்ளவும்.

❖ அம்பாள் ஆலயத்தின் திருப்பணிவேலைகளுக்கு நிதி அல்லது பொருட்கள் (சிமெந்து. கம்பி. மணல்) வழங்கி பங்களிப்பு செய்யவிரும்புவோர் ஆலய அலுவலகத்தில் மட்டுமே நேரடியாக வழங்கி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது ஆலய திருப்பணி உண்டியலில் காணிக்கைகளை செலுத்தமுடியும்.

❖ அம்பாள் ஆலயத்தின் பெயரால் திருப்பணி அல்லது திருவிழா.பூசை.அன்னதானம் என்பவற்றின் பெயரால் எந்தவொரு நிதி அல்லது பொருள் சேகரிப்பதற்கு உள்நாட்டிலோ வெளிநாடுகளிலோ எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.


**தர்மகர்த்தா**
**சிவ.பஞ்சாட்சரம்**

தொ.இல - **021 373 5259**
**www.madduvilpanriththalaichchiamman.com**

(cs.54286) N-1

# மரண அறிவித்தல்

மண்ணில்
28 . 09 . 1960



விண்ணில்
06 . 03 . 2024

## செபஸ்ரியாம்பிள்ளை டோறஸ் (அருமை)

**(சென். அன்ரனிஸ் ஸ்ரோஸ் உரிமையாளர்)**

யாழ்ப்பாணம் பாசையூரைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி இரத்தினபுரத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியாம்பிள்ளை டோறஸ் அவர்கள் 06.03.2024 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்ரியாம்பிள்ளை (இராசையா) - மெற்றலின் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - ஞானமலர் தம்பதியரின் அன்பு மருமகனும். ரோகினியின் பாசமிகு கணவரும். புனிதா. ராசு. ரோஸ். தேவன். ரூபி (கனடா). பவுலஸ் (கனடா). பன்னீர் (கனடா). செல்வம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும். யூட்ஸ். சனா (கனடா). கிங்ஸ்ஸி. றொசான். ராபேட். பௌஸ்ரினா. பியூனா ஆகியோரின் பாசமிகு தந்தையும். திவ்யா. சிந்து. நிசா. கலை. வாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும். சபானி. கேன்ஷிலி. யஸ்வினி. சது. தன்வி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (10.03.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து புனித திரேசாள் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்க ஆராதனை இடம் பெற்று பின்னர் நல்லடக்கத்திற்காக திருநகர் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 281 2995**
**077 303 8767**

(25695) A-1

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
19 . 07 . 1947



சிவன் அடியில்
05 . 03 . 2019

அமரர்

## பொன்னையா கந்தசாமி

*(யாழ். பல்கலைக்கழகத்தின் ஓய்வுநிலை பதில் பதிவாளர், யாழ் மருத்துவ பீடத்தின் ஓய்வு நிலை சிரேஷ்ட பதிவாளர், கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில், கைதடி இனுங்கித் தோட்டம் கந்தசுவாமி கோயில், கைதடி மாதாஜி லிங்கேஸ்வரர் கோயில் என்பவற்றின் சபை உறுப்பினர், கைதடி கிழக்கு சனசமூக நிலையத்தின் முன்னாள் செயலாளர், அதன் முன்பள்ளியின் ஆலோசகர்)*

அன்பினிலே மிகுந்தவராய் பண்பினிலே சிறந்தவராய்
மண்ணிலே உதித்து அமைவுற்ற வாழ்வினில்
நறுமணம் பரப்பி இல்லத்தில் விருட்சமாய் பாசநிழல்
தந்தையாய்
உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய் உரிமையாய்
உணர்வை அன்பாய் பகிர்ந்தே
விண்ணக வாழ்வை நாடியே சென்றீர்கள்
ஐந்து ஆண்டுகள் பறந்தோடிச் சென்றிருந்தாலும்
என்றென்றும் உங்கள் பாதம் போற்றியே
வாழ்ந்திடுவோம்.

(CS/54257) J-1

**"புஸ்ப பவனம்"**
**கைதடி கிழக்கு,**
**கைதடி.**

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிகளை விடுவிக்குக

## வடக்கு ஆளுநர் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 9

வடக்கு மாகாணத்தில் வனஜீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு திணைக்களத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகளை மீளவிடுவிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள அரச மரக்கூட்டுத்தாபனத்தில் அமைச்சரை நேரடியாகச் சந்தித்து ஆளுநரால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் பொதுமக்களால் பயன்படுத்தப்பட்ட காணிகள் வனஜீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அந்தக் காணிகளுக்குள் பொதுமக்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், விவசாயம், கால்நடை வளர்ப்பு உள்ளிட்ட செயற்பாடுகளையும் மேற்கொள்ள முடியாதுள்ளதாக ஆளுநர், துறைசார் அமைச்சரிடம் எடுத்துரைத்தார். இதனால் குறித்த வர்த்தமானியை மீளப்பெற்று, மக்களுக்கான பயன்பாட்டுக் காணிகளை விடுவிக்கு மாறும் ஆளுநர் கோரிக்கை விடுத்தார். வடக்கு மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளின் விவரம் அடங்கிய அறிக்கையும் அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சியிடம், ஆளுநர் இதன்போது சமர்ப்பித்தார்.

வடக்கு மாகாண ஆளுநரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மற்றும் கலந்தாலோசிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுப்பதாக வனஜீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி, ஆளுநரிடம் உறுதியளித்தார்.

(ஒ-27)




யாழ்.மாவட்ட தேசிய கலை இலக்கிய விழாப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கிருஷ்ணகுமார் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (ப-125)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையால் முன்னெடுக்கப்பட்ட சர்வதேச மகளிர் தின சிறப்பு நிகழ்வு கலாசாலையின் ரதி லட்சுமி மண்டபத்தில் கலாசாலை முதல்வர் ச.லலீசன் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் யாழ்ப்பாணக் கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி நளினி அகிலதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (ப-66)

# போதைப்பொருளுடன் இளைஞர் கைது

கஞ்சா மற்றும் ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் புங்குடுதீவுப் பகுதியில் இளைஞர் ஒருவர் போதைப்பொருள்களை உடைமையில் வைத்துள்ளார் என்று கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே மேற்படி இளைஞர் கைதுசெய்யப்பட்டதுடன், சந்தேக நபருக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-125)

**பணியாளர்கள் தேவை**

கொழும்பில் உள்ள உணவகம் ஒன்றிற்கு யாழ்ப்பாணப் பாரம்பரிய முறைப்படி சைவ/அசைவ உணவு தயாரிக்கக்கூடிய 40-55 வயதிற்கு உட்பட்ட ஆண்/பெண் சமையலாளர்கள் தேவை.

(உணவு, தங்குமிடம் இலவசம்)

தொடர்பு:- 070 445 4656

(CS 24037 A) S-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 13 . 05 . 1944



இறப்பு 04 . 03 . 2024

**அமரர் தம்பிப்பிள்ளை திருச்செல்வம்**

யாழ் மாவடி வளவு அச்செழு நீர்வேலியை பிறப்பிடமாகவும், உசன், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை திருச்செல்வம் 04.03.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மற்றும் நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் பொன்னையா-செல்லாச்சி தம்பதியரின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும், ஜெயமுகன் (சுவிஸ்), கேசவன் (இத்தாலி), பவித்திரா (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத்தந்தையும், ஜனுயா, அகல்யா, சுகிர்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜென்சிகா, அதீஸ், கென்சியா, ஆதியன், சயானி, அக்சியா, அனிஸ்யா ஆகியோரின் பாசமிகு பேரனும். காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற நடராசா மற்றும் பத்மநாதன் (கனடா), காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் பாலகௌரி, பற்குனசீலன் (மணியம் களஞ்சியம்), புஸ்பகுமார் (ஜேர்மனி), பவநந்தி, அன்பரசி (பிரான்ஸ்), ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் 11.03.2024 திங்கட்கிழமை பிரான்ஸில் 10.00 மணி தொடக்கம் 11.30 மணி வரை இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு

004 177 937 4280
003 367 960 9972
077 805 1739

தகவல்: குடும்பத்தினர்

(CR 42082) V-1

## INVITATION FOR BIDS
## TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Painting of Internal Medical ward Complex Ground Floor & First Floor | 1500.00 | 161,000.00 | 91 | 8.05 | C7 |
| 2. | Painting of Internal Medical ward Complex Second Floor, Third &Fourth Floor | 1500.00 | 164,000.00 | 91 | 8.20 | C7 |
| 3. | Painting of Internal Medical ward Complex External side and courtyard. | 1500.00 | 155,000.00 | 91 | 7.78 | C7 |
| 4. | Construction of lift room & Installation of lift machine at NTS lecture Hall Building | 5000.00 | 351,000.00 | 91 | 17.59 | C6 |
| 5. | Renovation of Histopathology Laboratory, Changing Drugstore Roller Shutter Door, Construction of coveredway new Medical Clinic & Construction of Patient waiting Area at A&E with Available roof & structure Material | 1500.00 | 85,000.00 | 91 | 5.59 | C7 |
| 6. | Renovation of ward No. 17, 23A, 16B, 23B, 05,12,14,11(washroom) & Medical ward Complex Sewerage Duct line | 1500.00 | 150,000.00 | 91 | 7.51 | C7 |
| 7. | Renovation of ward No 01, 02, 03, 04, 07, 08, 09,10,16B,21,22&20 (washrooms) | 1500.00 | 192,000.00 | 91 | 9.62 | C7 |
| 8. | Renovation of SHO Quarters Toilet, Old OPD courdyard Grill work & Repair of plate water leakage at WD 31 & Renovation of Rehabilitation Building | 1500.00 | 115,000.00 | 91 | 5.78 | C7 |
| 9. | Renovation of Consultant Tea lounge & HO Quarters washroom | 1500.00 | 200,000.00 | 91 | 9.98 | C7 |

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
3. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
4. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 11.03.2024 up to 31.03.2024 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
5. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 01.04.2024, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

**Director (Chairman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**

(cr.42077) (N-1)

09.03.2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். மாவட்ட ஊராட்சி முற்றக் கலந்துரையாடல் நிகழ்வு , வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு மற்றும் யாழ். மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் , கிறிசலிஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (எ-159)



மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த திங்கட்கிழமை, பாடசாலை மைதானத்தில் பிரதி அதிபர் செ.பிரசாத் அருள் தீபன் தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வில் வாண்மை விருத்தி நிலைய முகாமையாளர் திருமதி விஜயகுமாரி முருகேசபிள்ளை பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டிருந்தார். (எ-66)



கிராமிய அபிவிருத்திக்கான பயிர்ச்செய்கை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு சிறுதானியப் பயிர்கள் பயிரிடுவதற்கான விதைகள் மீசாலை கமநல சேவை நிலையத்தில் அந்தந்தப் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் கடந்த மாதம் வழங்கப்பட்டன. (ம-9)



இந்திய - இலங்கை அரசுகளின் கூட்டுச்சதியால் அநியாயமாகச் சாகடிக்கப்பட்ட சாந்தனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் கொக்குவில் பிரம்படிச் சந்தியில், பிரம்படிப் படுகொலை ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபிக்கு அருகில் அஞ்சலிப் பதாகையொன்று சாந்தனின் உருவப்படத்துடன் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (எ-66)



நயினாதீவு மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியை முன்னிட்டு மாணவர்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி நிகழ்வு வித்தியாலய முன்றிலில் அண்மையில் இடம்பெற்றது. (ப-66)



றோட்டறிக் கழகத்தால் பொருண்மியம் நலிவுற்ற மாணவர்களுக்குக்கான கற்றல் உபகரணங்கள் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் வைத்து அண்மையில் வழங்கப்பட்டன. (ம-159)





மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிரதிப் பணிப்பாளர் சுபோகரன் தலைமையில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் சர்வதேச ஈரநில தின நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. நிகழ்வில் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை, கடலோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் பாதுகாப்புத் திணைக்களம், வலி.கிழக்குப் பிரதேச செயலகத்துக்குரிய சுற்றாடல் முன்னோடிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-125)



சண்டிலிப்பாய் சொன்ட் நிறுவனத்தால் ஜே/129,ஜே/132,ஜே/133,ஜே/135,ஜே/136, ஜே/141,ஜே/142,ஜே/143, ஜே/145,ஜே /148,ஜே/ 149,ஜே/150, ஜே/152,ஜே/154,ஜே/155 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இடர் குறைப்புத் திட்டம் தயார்படுத்தல் தொடர்பிலான ஆரம்ப நிகழ்வு அண்மையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. (எ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைப்பொருளுடன் இளம்பெண் கைது!

கொழும்பு, மார்ச் 9

போதை மாத்திரைகள், ஐஸ் போதைப்பொருள் மற்றும் கேரளக் கஞ்சா ஆகியவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் இளம் பெண்ணொருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடையவரே கைதுசெய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 53 கிராம் 240 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள், 24 கிராம் கேரளக் கஞ்சா மற்றும் 30 மில்லிகிராம் 1,950 போதை மாத்திரைகள் விற்பனைக்குத் தயார்படுத்தப்பட்ட நிலையில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# தற்காலிகப் பணியாளருக்கு நிரந்தர நியமனம் வழங்கவும்



கொழும்பு, மார்ச் 9

வடக்கு மாகாணத்தில் தற்காலிக, பதிலீட்டு, சாதாரண மற்றும் தினக்கூலி அடிப்படையில் பணியாற்றும் 388 பேருக்கான நிரந்தர நியமனத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதியைப் பெற்றுத்தருமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடம் நேரடியாகச் சென்று கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள பிரதமரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சில் பணியாற்றும் 67 பேருக்கும், உள்ளூராட்சி அமைச்சின் கீழுள்ள பிரிவுகளில் கடமையாற்றும் 321 பேருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என ஆளுநர் தெரிவித்துள்ளார். விசேட திட்டத்தின் கீழ் இவர்களுக்கான நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கான அமைச்சரவை அனுமதியைப் பெற்றுத்தருமாறு ஆளுநர், பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இதேவேளை, ஒரு இலட்சம் வேலைவாய்ப்பின் அடிப்படையில் வழங்கப்பட்ட சிற்றூழியர் நியமனங்கள் வடக்கு மாகாணத்தில் முழுமையாக நிரப்பப்படவில்லை எனவும் ஆளுநர் தெரிவித்தார். வடக்கு மாகாண ஆளுநரின் கோரிக்கை கடிதத்தைப் பெற்றுக்கொண்ட பிரதமர் தினேஷ் குணவர்த்தன, இந்த விடயம் தொடர்பில் விரைவில் சாதகமான பதிலை வழங்குவதாக உறுதியளித்தார். (ஒ-26)

இலங்கை விமானப்படையின் 73 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விமானப்படையின் கல்வி மற்றும் தொழில்நுட்பக் கண்காட்சி என்பன யாழ்.முற்றவெளி மைதானத்தில் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி இரண்டாவது நாளாக நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றன. (ப-66)





சுன்னாகத்தைச் சேர்ந்த பொருண்மியம் நலிந்த பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கு, சுன்னாகம் பாரம்பரிய றோட்டறிக் கழகமும் பழுனுகம றோட்டறிக் கழகமும் இணைந்து கோழிகள் மற்றும் கூடுகள் என்பவற்றை வழங்கிவைத்தன. (ப-125)


## கண்ணீர் அஞ்சலி



சங்கத்தின் உறுப்பினர் திரு இருதயநாதர் ராஜா அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர் பாக்கியநாதர் இராயப்பு இருதயநாதர்

அவர்கள் 08.03.2024 அன்று இறைபதமடைந்தார்.

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 22.02.1950 மறைவு 08.03.2024

ஊழியர் நலன்புரி சங்கம்
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை


## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் நேற்றுக் கவனவீர்ப்பு

முல்லைத்தீவு, மார்ச் 9

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கங்கள் ஒன்றிணைந்து சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு நகர சுற்றுவட்டப் பாதையில் கவனவீர்ப்புப் போராட்டமொன்றை நேற்று முன்னெடுத்தன.

காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தை நாங்கள் வேண்டாம் என்று எதிர்த்துப் போராடி வந்தாலும் தற்போது மாவட்டச் செயலகம் ஊடாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஒவ்வொருவருக்கும் கட்டாயமாகக் கடிதம் அனுப்பி அவர்களை வாகனம் விட்டு ஏற்றி பதிவுகளை மேற்கொண்டு சர்வதேசத்தை ஏமாற்றி வருகின்றார்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டத்தை இல்லாமல் ஒழிப்பதற்கு அரசுடன் இணைந்து செயற்பட்டுவருகின்றார்கள்.

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் பூசகரை கைது செய்திருக்கின்றார்கள்.

சைவ தலத்தில் சிவராத்திரியில் சிவனைக்கூட வழிபடும் உரிமை கூட இல்லாத நாடாகத்தான் இருக்கின்றது. வடக்கு - கிழக்கில் தமிழ்மக்கள் வாழமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்பதை சர்வதேசம் உணர்ந்து எமது தமிழ்மக்கள் சுதந்திரமாக வாழ வழிசெய்யவேண்டும்' என்று போராட்டத்தின் முடிவில் தெரிவித்தனர். (ஓ-15)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 24.05.1965



உதிர்வு 08.02.2024

கடந்த 08.02.2024 அன்று இறைவனடி சேர்ந்த

அமரர் திருமதி சுமித்ரா பாஸ்கரன்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும், ஆத்மா சாந்திப் பிரார்த்தனையும் இன்று (09.03.2024) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும். அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து பல வழிகளிலும் உதவி புரிந்த உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும், தொலைபேசியூடாகவும், வலைத்தளங்களூடாகவும் அனுதாபம் தெரிவித்த அன்புள்ளங்களுக்கும் பதாகைகள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் நேரில் வந்து ஆறுதல் கூறிய அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.481, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைக்கிள்கள் விபத்து: ஒருவருக்கு படுகாயம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

வடமராட்சி - பருத்தித்துறையில் இரண்டு சைக்கிள்கள் நேருக்குநேர் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

பருத்தித்துறை முதலாம்கட்டைச் சந்திப்பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு 8 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. 48 வயதுடைய நபர் விபத்தில் படுகாயமடைந்ததைத் தொடர்ந்து அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் வழங்கப்பட்ட முதற்கட்ட சிகிச்சைகளுக்குப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (அ-ம-100)





## வெடுக்குநாறி....

வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நேற்றையதினம் சிவராத்திரி வழிபாடுகள் மேற்கொள்ளப்படவிருந்த நிலையில், இதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைக்காகச் சென்ற ஆலயத்தின் பூசகர் உள்ளிட்ட இருவர் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டிருந்தனர். காட்டுப்பகுதிக்குள் நுழைந்தனர் என்ற குற்றச்சாட்டு அவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்த நிலையில் அவர்களை நேற்றையதினம் வவுனியா நீதிமன்றம் பிணையில் விடுவித்தது.

### நேற்றும் தொடர்ந்த பதற்றம்

இதையடுத்து ஆலயச் சுற்றுவட்டாரத்தில் நேற்று பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டு வழிபாட்டுக்காகச் சென்ற பொதுமக்கள் மீது கடும் கெடுபிடிகள் பிரயோகிக்கப்பட்டன. வழிபாடுகளை மேற்கொள்வதற்காக வந்த பொதுமக்கள் ஆலய வளாகத்துக்குள் அனுமதிக்கப்படவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட அரசியல் தலைவர்களும் சமயத்தலைவர்களும் சம்பவ இடத்துக்கு விரைந்து மேற்கொண்ட நடவடிக்கைகளையடுத்து, வழிபாடுகளுக்காகச் செல்வதற்கு பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

### தண்ணீர் இன்றி பரிதவிப்பு

நீண்ட இழுத்தடிப்புக்குப் பின்னர், வழிபாடுகளுக்காகப் பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டபோதிலும், வாகனங்கள் உட்பிரவேசிக்கத் தடை விதிக்கப்பட்டது. இதனால் ஒலுமடு பிரதான வீதியிலிருந்து சுமார் 5 கிலோமீற்றர் தூரம் காட்டுப்பாதையூடாக நடந்துசென்றே ஆலயத்தை அடைந்து பொதுமக்கள் வழிபாடுகளை மேற்கொண்டனர். பூசைப்பொருள்களைக் கொண்டுசெல்லவும் வாகனங்கள் அனுமதிக்கப்படாததால், இளைஞர்கள் அவற்றைச் சுமந்தபடி சென்றனர். உச்சக்கட்டமாக குடிதண்ணீர் இல்லாமல் பொதுமக்கள் பெரும் அங்கலாய்ப்புக்கு ஆளாகினார்கள். 'கான்'களில் குடிதண்ணீரை இளைஞர்கள் சுமந்துசென்றபோதிலும் அவற்றைக் கொண்டுசெல்ல நீண்டநேரமாகப் பொலிஸார் அனுமதிக்கவில்லை. கடைசிநேரத்திலேயே தண்ணீர் கொண்டு செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

### சப்பாத்துக்கால்களால் அவமதிப்பு

ஆலயத்தின் புனிதப் பகுதியிலும், அதன் சுற்றுப் புறத்திலும் சப்பாத்துக் கால்களால் பொலிஸார் நடந்து திரித்தனர். அத்துடன், படையல் பொருள்கள் மற்றும் அன்னதானம் என்பவற்றைப் பொலிஸார் சப்பாத்துக்கால்களால் தட்டிவிட்டனர். இது பக்தர்கள் மத்தியில் பெரும் சஞ்சலத்தை ஏற்படுத்தியது. இதற்குப் பக்தர்கள் தங்களின் அதிருப்தியைத் தெரிவித்ததையடுத்து பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே பெரும் வாக்குவாதம் ஏற்பட்டது.

### இரவிரவாகத் தொடர்ந்த பதற்றம்

மாலை 6 மணிக்குப் பின்னர் பொதுமக்கள் அவ்விடத்தில் நிற்கவேண்டாம் என்றும் ஆலயத்தைவிட்டு வெளியேறிவிட வேண்டும் என்றும் பொலிஸார் அறிவுறுத்தினர். எனினும் அதை ஏற்க மறுத்த பக்தர்கள், "இது சிவனுக்கு இரவிரவாக மேற்கொள்ளவேண்டிய வழிபாடு. ஆதலால், ஆலயத்தைவிட்டு வெளியேறும் எண்ணமில்லை" என்று தெரிவித்து இரவிரவாக அங்கேயே வீற்றிருந்து வழிபாடுகளில் ஈடுபட்டனர். பொலிஸாரின் தள்ளுமுள்ளுக்கு மத்தியில் 'ஓம் நமச்சிவாய' என்ற மந்திரத்தை அவர்கள் ஓயாது உச்சரித்துக்கொண்டிருந்தனர்.

### பொலிஸாரின் பலப்பிரயோகம்

இரவு 8 மணியளவில், வழிபாட்டில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது பொலிஸார் பலப்பிரயோகத்தை மேற்கொண்டனர். ஆலயச்சூழலை விட்டு வெளியேறாத எட்டுப்பேர் முற்றுமுழுதான பலப்பிரயோகத்தைப் பயன்படுத்திக் கைதுசெய்யப்பட்டனர். நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனையும் குண்டாங்கட்டாகப் பொலிஸார் கைதுசெய்ய முற்பட்டனர். அவர் தன்னை நாடாளுமன்ற உறுப்பினர் என்று அடையாளப்படுத்தியதையடுத்து, சிறப்புரிமைக் காரணங்களுக்காக மிருகத்தனமான கைது நடவடிக்கையில் இருந்து செல்வராசா கஜேந்திரன் தப்பித்துக்கொண்டார். வேட்டி அணிந்திருந்த ஒருவரைக் கைதுசெய்ய முற்பட்டபோது அவருடைய ஆடை அவிழ்ந்தது. அவர் தன்னுடைய ஆடையைச் சீர்செய்யும் அவகாசத்தைக்கூட பொலிஸார் அவருக்கு வழங்காமல் தரதரவென அவரைப் பொலிஸ் நிலையம் வரை இழுத்துச் சென்றனர்.

தொடர்ச்சியாக சிவ வழிபாட்டுக்காக நின்ற சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட பக்தர்கள் இரவிரவாக காட்டுப்பாதையூடாக பொலிஸாரால் விரட்டி வெளியேற்றப்பட்டனர்.

### காடையர்குழு களத்தில்

எப்போதெல்லாம் வெடுக்குநாறிமலையில் பதற்றம் ஏற்படுகின்றதோ அப்போதெல்லாம் அந்தப் பகுதியில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த காடையர் குழு களமிறங்குவது வழமை. நேற்றும் காடையர்கள் சிலர் பிக்குகளின் தலைமையில் கூட்டமாக வெடுக்குநாறி மலைக்கு வந்து சற்றுத் தூரத்தில் நிலைகொண்டிருந்தனர். அவ்வப்போது அவர்கள் ஆதிசிவன் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்ட பக்தர்களுடன் வார்த்தைச் சீண்டல்களிலும் ஈடுபட்டனர். இந்தச் செய்தி அச்சுக்குப் போகும்வரை வெடுக்குநாறிமலையில் பதற்ற நிலையே தொடர்ந்தது. (அ-ம-110-26-125)

## வடக்கின்...

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது. சகாதேவன் சயந்தன் அதிகபட்சமாக 55 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் அருள் சீலன் கவிசன் 5 விக்கெட்டைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி நேற்றுமுன்தினம் முதலாம்நாள் முடிவில் இரண்டு விக்கெட்களை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அந்த அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக நேசகுமார் எபிநேசர் ஜெசியல் 52 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் தீசன், அபிலாஸ் இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினார்கள்.

71 ஓட்டங்கள் பின்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி நேற்றைய நாள் முடிவில் 9 இலக்குகளை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. நிசான் அதிகபட்சமாக 23 ஓட்டங்களைப் பெற்றார். ஆட்டத்தின் இறுதி நாள் இன்றாகும். (அ-ம)

## வெளிநாடு...

ஊரெழுவைச் சேர்ந்த அந்த யுவதி, வெளிநாட்டுக்குச் செல்பவர்களுக்கான தொடர்பகம் ஒன்றை யாழ்ப்பாணம் நகரை அண்மித்த பகுதியொன்றில் செயற்படுத்தி வந்துள்ளார். பணத்தை வழங்கியவர்கள் ஒருகட்டத்தில் யுவதியின் நடவடிக்கை மீது சந்தேகப்பட்டதையடுத்து அவருக்கு எதிராக யாழ்ப்பாணம் விசேட குற்றவிசாரணைப் பிரிவினரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். இதையடுத்து அந்த யுவதி தலைமறைவாகியுள்ளார். யாழ்ப்பாணம் விசேட குற்றவிசாரணைப் பிரிவினரின் தொடர்ச்சியான விசாரணைகளைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் அவர் கைதுசெய்யப்பட்டார். அந்த யுவதியின் வங்கிக்கணக்கில் 4 கோடி ரூபா வரையில் பணப்பரிவர்த்தனை இடம்பெற்றுள்ளது. அந்தப் பணத்தை அவர் பிறிதொருவரின் வங்கிக்கணக்குக்கு மாற்றி வந்துள்ளார். இதனால், இந்த மோசடியின் பின்னர் வேறு நபர்களும் இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

கொழும்பு மற்றும் இதர பகுதிகளைச் சேர்ந்த மோசடியாளர்களும், போலித் தரகர்களும் நம்பகத்தன்மை ஏற்படுவதற்காக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களை தமக்கான முகவர்களாக அமர்த்தி தொடர்ச்சியான மோசடிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று அண்மைக்காலமாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## காணி...

குற்றவிசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தக் காணி மூவருக்குச் சொந்தமாக வேண்டியதாக இருந்துள்ளது. அவர்களில் ஒருவர் காலமான நிலையில், ஏனைய இருவரும் வெளிநாட்டில் வசித்து வருகின்றனர். அவர்களில் ஒருவரே மற்றையவருக்குத் தெரியாமல் காணியைத் தனது பெயருக்கு உரிமை மாற்றம் செய்துள்ளார். இது தொடர்பில் பாதிக்கப்பட்டவரால் யாழ். மாவட்ட விசேட குற்றவிசாரணைப் பிரிவினரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கைதுசெய்யப்பட்டவர், பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவிருந்த நிலையில், காணியை சட்டத்தரணி ஊடாகக் கைதுறந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## கனடா...

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபர் 56 இலட்சம் ரூபாவை பதுளையைச்சேர்ந்த மேற்படி நபரிடம் கனடாவுக்குச் செல்வதற்காகக் கொடுத்துள்ளார். எனினும், போலியான வாக்குறுதிகளை வழங்கி நீண்டகாலமாக அந்த நபர் ஏமாற்றிவந்ததையடுத்து, விடயம் தொடர்பில் யாழ். மாவட்ட விசேட குற்றவிசாரணைப் பிரிவினரிடம் முறையிடப்பட்டுள்ளது.

முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் நேற்றுமுன்தினம் சந்தேகநபரைக் கைது செய்தனர். அவர் நேற்றையதினம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். (அ-ம-26)

## ஐ.எம்.எப்....

நாளைமறுதினம் திங்கட்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க, தமிழரசுக்கட்சித் தலைவர் சிறீதரன் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-44)

## சிவராத்திரி...

வார்த்து நெய் விளக்கு ஏற்றி வேண்டுதல்கள் மற்றும் நேர்த்திக்கடனைச் செலுத்தினர். இலட்சக்கணக்கான பக்தர்கள் உணர்வுபூர்வமாக இந்த வழிபாடுகளில் கலந்துகொண்டனர். (அ-ம-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களின் அத்துமீறல்: கடற்றொழிலைக் கைவிட்ட மீனவர்

இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்த இந்திய மீனவர்களின் படகுகளால் வலைகள் சேதமாக்கப்பட்டமையால்மீன்பிடித்தொழிலை மீனவர் கைவிட்டு கூலி வேலைக்குச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த குறித்த மீனவர் மேலும் தெரிவித்ததாவது,

மிகவும் கஷ்டமான நிலையில் கடன்பட்டு வலைவாங்கி தொழில்செய்து 14 நாள்கள் கடந்துள்ள நிலையில் ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான வலையை இந்திய இழுவைப்படகுகள் அறுத்துவிட்டன. அடுத்து என்ன செய்வது என்று தெரியாத நிலையில் கடற்றொழிலை கைவிட்டுவிட்டு வாடிகளில் கூலிவேலை செய்து வருகின்றேன். 2009ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப் பகுதியில் கடலில் மீன்கள் அதிகமாக இருந்தன. மீன் விலையும் குறைவு. 70ரூபா 80 ரூபா. இப்போது 700 ரூபாவுக்கு மீனை விற்றுக்கூட எங்களால் வாழமுடியாத நிலை இருக்கின்றது.

இப்போதுமீன்படும்வீதம்குறைந்துள்ளது. இதற்கு காரணம் இந்திய இழுவைப்படகுகள்தான். எங்கள் கரையில் இருந்து 3 கிலோமீற்றர் தூரத்துக்குள் வந்து அவர்கள் மீன்பிடிக்கின்றார்கள்.

இதைத் தடுத்து நிறுத்தினால்தான் நிம்மதியாகதொழில் செய்ய முடியும்- என்றார். (ஒ-19)


## ஊர் ஆடுகள் வாங்கப்படும்

பட்டி வளர்ப்பிலுள்ள ஊர் ஆடுகள் மொத்தமாக வாங்கப்படும்.

தொடர்பு:- 077 866 0068

## Win Repair

உங்களது குளிர்சாதனப்பெட்டிகள், சலவை இயந்திரங்கள், AC களும் பழுதடைந்து விட்டனவா? கவலையை விடுங்கள்.
உங்கள் இடத்திற்கே வந்து சிறந்த முறையில் திருத்திக்கொடுக்கப்படும்.

தொடர்பு: 076 906 4682

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியில் புத்தூர்ச் சந்தியிலிருந்து - கைதடி, சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து 100m இல் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு.
2 பரப்பு - 4 1/2 லட்சம். கையிருப்பில் 16 காணித்துண்டுகள் மாத்திரம் உள்ளன.
தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்:
காலை: 8.30 - மாலை 6.00

தொடர்புகளுக்கு: 076 659 0583
074 260 0617
076 109 8504

## விவசாயிகளுக்கு

இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட
Greaves MK12, MK 20 நீர் இறைக்கும் இயந்திரம்
(Water Pump) இலங்கையில் முதன்முதலாக அறிமுகப்படுத்துகின்றோம். ஒரே சுவிற்சில் விரும்பிய எரிபொருளை நீங்களே தெரிவு செய்யலாம். (மண்ணெண்ணெய், பெற்றோல், டீசல்)



"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"

ஆர்க் . என் . கம்பனி

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாள். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன் 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 973 9917

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் காட்டுக் கந்தோர வீதியில் A9 வீதியில் இருந்து 300 மீற்றர் தொலைவில்
1 வெட்டுக்கிணறுடன் கூடிய 7 பரப்புக் காணி விற்பனைக்கு.
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:-
சாந்தி: 075 432 2011,
ரூபன் : 077 654 4677

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் செல்வமகால் திருமண மண்டபத்திற்கு அருகில் 7 1/2 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 229 4985

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1989 பூராடம் (5 இல் சூரியன், செவ்வாய், புதன்) கிரகபாவம் 14 3/4, அரச உத்தியோகம் பார்க்கும் மணமகளுக்கும், 1990 திருவோணம் (கிரகபாவம் 22 1/2) மணமகளுக்கும், மணமகன் தேவை.

தொடர்பு:- 076 473 7345

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் அச்சுவேலி சந்நிதி கோவில் செல்லும் பிரதான வீதி தீர்த்தப்பிள்ளையார் கோவில் அருகாமையில்
24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு

- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- 20 அடிப்பாதையுடன்
- பிரதான வீதியிலிருந்து 100 m தூரம், குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி நன்னீரூற்று
- அச்சுவேலி பஸ்நிலையத்திலிருந்து 1 1/2 Km தூரம்
- ஒரு பரப்பின் விலை 500,000 (ஐந்து லட்சம்)
- பார்வையிடும் நேரம் காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

076 739 0413 / 077 468 3354

## காணி விற்பனைக்கு உண்டு


யாழ்ப்பாணம் நெல்லியடி கரணவாய் கரவெட்டியில்
33 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு

- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- நெல்லியடி பஸ்நிலையத்திலிருந்து 2 km தூரம்
- விக்கினேஸ்வரா வித்தியாலயம் 500m தூரம்
- உச்சியம்மன் கோவில் அருகாமையில்
- 20 அடிப்பாதையுடன்
- 1 பரப்பின் விலை 500,000 (ஐந்து லட்சம்)
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- பார்வையிடும் நேரம் காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

071 173 3911 / 076 853 5022


## மரண அறிவித்தல்

அன்னையின் மடியில்
05 . 03 . 1943



ஆண்டவன் அடியில்
06 . 03 . 2024

### செனகரட்ணம் ஜெயரட்ணம் (ஜெயம்)

(இளைப்பாறிய தொழில்நுட்பவியலாளர், கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் யாழ். உரும்பிராய் வடக்கு இந்துக் கல்லூரி வீதியை வதிவிடமாகவும் கொண்ட செனகரட்ணம் ஜெயரட்ணம் கடந்த 06.03.2024 புதன் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செனகரட்ணம் - மல்லிகைபுஸ்பம் தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான பத்மனாதன் - லீலாவதி மற்றும் பொன்னுத்துரை இரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான மாலதி (1990), சுகிர்தராணி ( 2020 ) ஆகியோரின் அன்புக் கணவரும், லக்ஷ்மணனின் (லக்கி - கனடா) பாசமிகு தந்தையும், அனுஷியின் (கனடா) அன்பு மாமனாரும், மங்கையற்கரசி மற்றும் காலஞ்சென்றவர்களான புஸ்பரட்ணம், இரத்தினாவள்ளி, டஸ்பானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.03.2024) சனிக்கிழமை. இந்துக் கல்லூரி ஒழுங்கை உரும்பிராய் வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு தகனக் கிரியைக்காக நாளை (10.03.2024) ஞாயிற்றுக்கிழமை 8.00 மணியளவில் கிரியைகள் ஆரம்பமாகி உரும்பிராய் இருளன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
மகன்: 076 320 3305



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெற் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.03. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org